**ஊடக வெளியீடு:**

## 19 ஆவது தேசிய அதிசிறந்த தர ICT விருதுகள் விழாவில் கொன்சுலர் பிரிவு இரு விருதுகளை வென்றுள்ளது.

2017 ஒற்றோபர் 06 ஆந் திகதியன்று தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்ற 19ஆவது தேசிய அதிசிறந்த தர ICT விருதுகள் விழாவில், பொதுத் துறையின் மிகச்சிறந்த ICT சாதனை விருது மற்றும் அரசாங்க மற்றும் பொதுத் துறையில் தங்க விருது ஆகியன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சுலர் அலுவல்கள் பிரிவுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு விருதுகளும் இலங்கை குடிமக்களுக்கு தரமான சேவைகளை வழங்கும் வகையில், அதன் ஒன்லைன் இலத்திரனியல் ஆவண உறுதிப்படுத்தல் முறைமையை (e-DAS) அபிவிருத்தி செய்தமை மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்தும் வகையில் கொன்சுலர் பிரிவில் மேற்கொண்ட ICT சூழல் அறிமுகம், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி ஆகிய முயற்சிகளை பாராட்டி கௌரவிக்கும் முகமாக வழங்கப்பட்டுள்ளன. இலங்கையின் பொதுத் துறையில் மிகவும் புத்துருவாக்கம் மிக்க டிஜிட்டல் தளமாக e-DAS மதிப்பிடப்பட்டுள்ளது.

தங்கு தடையற்ற ஆவண உறுதிப்படுத்தல் மற்றும் பொதுமக்களின் செயலாக்க நேரத்தை மேம்படுத்தும் வகையிலும், ஒன்லைன் முறைமை ஊடாக சந்திப்புக்களை முன்பதிவு செய்யும் குறிக்கோளுடனும் 2017 பெப்ரவரி 06 ஆந் திகதி ஒன்லைன் e-DAS தளத்தை கொன்சுலர் பிரிவு அங்குரார்ப்பணம் செய்திருந்தது.

இந்த NBQSA விழாவானது, பொதுத்துறை மிகச்சிறந்த சாதனை உள்ளடங்கலாக 19 பிரிவுகளின் கீழ் மிகச்சிறந்த ICT புத்துருவாக்கங்களை அடையாளப்படுத்தி கௌரப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது. இந்த போட்டிக்கான விண்ணப்பங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ICT துறை மற்றும் கல்விசார் நிபுணர்கள் குழு மூலமாக மதிப்பிடப்படுகின்றன. இந்த விருதுகள் வழங்கும் விழாவானது, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை இலங்கையுடன் கூட்டிணைந்து ஐக்கிய இராச்சியத்தின் தகவல் தொழில்நுட்ப முகவர் நிலைய பட்டய நிறுவகம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முகவர் நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்படுகிறது.

ICTA ஆனது e-DAS திட்ட முகாமைத்துவத்திற்கான தொழில்நுட்ப சேவை வழங்குநராக இருந்துள்ளது. e-DAS திட்டத்திற்கான மென்பொருளை EPIC லங்கா பிரைவேற் லிமிடெட் அபிவிருத்தி செய்துள்ளது.

இந்த விருதுகளை பெறுவதற்கான நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.பிரசாத் காரியவசம், கொன்சுலர் பிரிவின் சிரேட்ட பணிப்பாளர் நாயகம் திரு.எஸ்.எஸ்.கணேகம ஆராச்சி மற்றும் கொன்சுலர் பிரிவின் பதவியினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.